**F–2761**

| Sub. Code |
|---|
| 7MTA1C1 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**First Semester**

**தமிழ்**

**இக்கால இலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. முடியரசனின் படைப்புகள் மூன்றினைக் கூறுக.

2. 'மலரும் மாலையும்' என்ற தலைப்பிலான கவிதை யாருடையது?

3. மீராவின் இயற்பெயர் என்ன?

4. நேயர் விருப்பம் நூலின் ஆசிரியர் யார்?

5. ஜெயகாந்தனின் பெற்றோர் பெயர் யாது? அவர் பிறந்த ஊர் எது?

6. கு.ப. இராஜகோபாலன் படைப்புகள் மூன்றினைக் கூறுக.

7. நா. பார்த்தசாரதியின் பரிசு பெற்ற நாவல்களின் பெயரினைக் குறிப்பிடுக.

8. கோ.வி. மணிசேகரன் படைத்த வரலாற்று நாவல்கள் மூன்றினைக் கூறுக.

9. வ.சுப. மாணிக்கனார் துணைவேந்தராகப் பணியாற்றிய பல்கலைகழகத்தின் பெயரினையும் ஊரினையும் குறிப்பிடுக.

10. 'வளையலுக்கு ஒரு கரம்' என்னும் நாடகத்தில் இடம்பெறும் உறுப்பினர்களின் பெயரினைச் சுட்டுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) பாஞ்சாலி சபதத்தின் வழி வெளிப்படும் பாரதியின் கவிதைச் சிறப்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) பொங்கலின் சிறப்புகள் குறித்து நாமக்கலார் கூறும் கருத்துக்களை விவரிக்க.

12. (அ) கவிஞர் மு. மேத்தாவின் கற்பனை வளத்தைக் கண்ணீர் பூக்கள் கொண்டு விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) புவியரசனின் ஆளுமைப் பண்புகளை 'இதுதான்' கவிதை வழி விளக்கி எழுதுக.

13. (அ) கு.ப. ராஜகோபாலனின் சிறுகதைகளில் இடம்பெறும் துயரச் செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'மின்சாரப் பூ' சிறுகதையின் பெயர் பொருத்தத்தை ஆராய்க.

14. (அ) தோல் நாவல் புலப்படுத்தும் மக்களின் வாழ்க்கை முறைகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) குற்றாலக்குறிஞ்சி நாவலில் இடம்பெறும் பெண் மாந்தர்களின் பாத்திரப்படைப்பு பெறுமிடம் குறித்து விளக்குக.

15. (அ) படிப்பதற்கு முன்வரைவு தயாரிக்கும் முறையினை இலக்கிய உலா வழி புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) 'காற்றும் கற்பாறையும்' என்ற நாடகம் வலியுறுத்தும் நேர்மைத் திறத்தினை எடுத்துரைக்க.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. பாரதிதாசனின் திராவிடக் கருத்துக்களைச் சஞ்சீவி பருவதத்தின் சாரல் வழி விவரிக்க.

17. சூரியனைச் சுமப்பவர்கள் கவிதைகள் புலப்படுத்தும் சமுதாய உணர்வுகளைத் தொகுத்துரைக்க.

18. ஜெயகாந்தன் பாத்திரப் படைப்புகளின் தனித்தன்மையை எடுத்துரைக்க.

19. சத்திய வெள்ளம் நாவலின் வழி வெளிப்படும் வேலையில்லாத் திண்டாட்டம் குறித்து அறியலாகும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

20. பேராசிரியர் ம. திருமலையின் இலக்கிய உலா நூல் உணர்த்தும் கருத்துக்களை விரிவாக எடுத்துரைக்க.

———————

| F–2762 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA1C2 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**First Semester**

**தமிழ்**

**பக்தி இலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : Three Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. நாவுக்கரசரின் சிறப்புப் பெயர்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

2. ''தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடியவர் யார்?

3. திருகோத்தும்பி குறிப்பு வரைக.

4. காரைக்கால் அம்மையாரின் இயற்பெயரினைச் சுட்டுக.

5. ஆண்டாளின் பிறபெயர்களையும் அவர் திருப்பாவையில் பாடியுள்ள பாடல்களின் எண்ணிக்கையையும் குறிப்பிடுக.

6. குலசேகர ஆழ்வார் திருமாலின் எந்த அம்சமாகக் கருதப்படுகின்றார்?

7. ஹச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளையின் படைப்புகள் மூன்றினைக் கூறுக.

8. இரட்சண்யசரிதம் – பெயர் காரணம் தருக.

9. 'பாவி முகத்தையும் பாத்தரு ளித்தான்' – என்று பாடியவர் யார்?

10. குணங்குடியார் தங்கித் தவம் மேற்கொண்ட மூன்று இடங்களின் பெயர்களைக் கூறுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) திருமறைக்காட்டுப் பதிகத்தில் சம்பந்தர் இறைவனை எங்ஙனம் காட்சிப்படுத்தியுள்ளார்? விளக்குக.

(அல்லது)

(ஆ) நாவுக்கரசரின் பக்திச் சிறப்பினை திருக்குறுந்தொகை வழி விளக்குக.

12. (அ) தும்பி சிவபெருமானிடம் கூற வேண்டிய செய்திகள் யாவை?

(அல்லது)

(ஆ) அற்புதத் திருவந்தாதியில் காரைக்கால் அம்மையார் இறைவனிடம் வேண்டுவனவற்றை விளக்கி எழுதுக.

13. (அ) அரங்கனைத் தரிசிப்பதற்குக் குலசேகர ஆழ்வார் வேண்டும் முறையினை விளக்குக.

(அல்லது)

(ஆ) பாவை நோன்பு மேற்கொள்ளும் முறைகளைத் திருப்பாவை பாடல்கள் விளக்குக.

14. (அ) இரட்சணிய சரிதம் முன்வைக்கும் கருத்துக்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) மதக்குருமார்கள் இயேசுவைக் கொலை செய்ய எண்ணியதன் நோக்கத்தை விளக்குக.

15. (அ) ஆனந்தக் களிப்பு – பெயர்க்காரணம் தருக.

(அல்லது)

(ஆ) குணங்குடியாரின் வாழ்க்கை வரலாற்றை விளக்கி எழுதுக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. திருஞானசம்பந்தரின் திருவாரூர் திருப்பதிகம் புலப்படுத்தும் கருத்துக்களை விவரிக்க.

17. கோத்தும்பியை நோக்கி மாணிக்கவாசகர் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

18. நம்மாழ்வாரின் பக்தி உணர்வைத் திருவாய்மொழி வழி விவரிக்க.

19. யூதாசுவின் தீய குணங்களைச் சூழ்வினைப் படலம் கொண்டு விரித்துரைக்க.

20. ஆனந்தக் களிப்பு புலப்படுத்தும் வாழ்வியல் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

———————

**F–2763**

**Sub. Code**
**7MTA1C3**

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**First Semester**

தமிழ்

அற இலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. குடிகள் அஞ்சும்படியாக கொடுமைகளை செய்யும் அரசனுக்கு விரைவில் என்ன நேரும் என்று உணர்த்துகிறார்.

2. மக்கள் செய்யும் தொழில்களைக் கொண்டு அவர்களைப் பற்றி என்ன அறிந்து கொள்ளலாம் என்கிறார் வள்ளுவர்?

3. 'யானைப்பல் காண்பான் பகல்' – பழமொழி உணர்த்தும் பொருள் யாது?

4. 'செத்தாரைச் சாவார் சுமந்து' – பொருள் தருக.

5. தமக்கு வரும் பழிச்சொல்லைக் கண்டு யார் அஞ்சுவர்? யார் அஞ்சமாட்டார்? என்கிறார் சிவப்பிரகாசர்?

6. நீதிநெறி விளக்கத்தின் ஆசிரியர் யார்?

7. ஐவர் கூலியை வைத்துக்கொள்ள வேண்டாம் என்று உணர்த்தும் நூல் எது? ஐவர் யார்?

8. ‘கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே’

சங்கு சுட்டாலும் வெண்மை தரும்’ என்று பாடியவர் யார்?

9. ‘சித்திரம் பேசேல்’ என்று கூறுபவர் யார்? இடம் பெறும் நூல் எது?

10. ‘உடலினை உறுதி செய்’ என்று பாடியவர் யார்? இடம் பெறும் நூல் எது?

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) அறிவுள்ளவரைத் துணையாகக் கொள்வதற்கு வள்ளுவர் கூறும் வழிமுறைகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) கல்வி கற்காமையினால் விளையும் இழிவு குறித்து வள்ளுவர் உணர்த்துவது யாது?

12. (அ) யாக்கை நிலையாமை குறித்து விளம்பிநாகனார் உணர்த்தும் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) இன்னாத செயல்களாக கபிலர் கூறுவன யாவை? விளக்குக.

13. (அ) நீதிநெறி விளக்கம் புலப்படுத்தும் நீதிகளை எடுத்து இயம்புக.

(அல்லது)

(ஆ) நன்னெறி புலப்படுத்தும் உவமைகளை விளக்கி எழுதுக.

14. (அ) நல்வழி உணர்த்தும் உலகியல் நிலைப்பாட்டினை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) முருகப்பெருமானை வணங்கினால் கிடைக்கும் பேற்றினை உலகநாதர் வழி எடுத்தியம்புக.

15. (அ) பாரதிதாசனின் ஆத்திசூடி வழியாக அறியலாகும் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) பாரதியாரின் ஆத்திசூடி புலப்படுத்தும் நீதிகளை எடுத்துரைக்க.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு **கட்டுரை** வடிவில் விடை தருக.

16. சுற்றத்தாரை நீங்காமல் தழுவிக் கொள்ளுவதற்கு வள்ளுவர் கூறும் வழி முறைகளைத் தொகுத்துரைக்க.

17. கற்றோரவையில் கல்லாரின் செயல்பாடுகளை முன்றுறையரையனார் உணர்த்தும் முறையை விவரிக்க.

18. சிவப்பிரகாசர் பாடல் வழி அறியலாகும் வாழ்வியல் தத்துவங்களை எடுத்துரைக்க.

19. வளமான வாழ்வு வாழ்வதற்கு அதிவீரராமபாண்டியன் கூறும் அறங்களைத் தொகுத்துரைக்க.

20. ஔவையார் உணர்த்தும் அறநெறிகளை விவரிக்க.

———————

**F–2764**

**Sub. Code**
**7MTA1C4**

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**First Semester**

**தமிழ்**

தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (இளம்பூரணர் உரை)

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours | Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் ஒரிரு வரிகளில் விடை தருக.

1. ‘மகான் புள்ளிமுன் வவ்வும் தோன்றும்’ – விளக்குக.
2. க ச த ப என அகரமொடு வரும் – தெளிவுபடுத்துக.
3. நுனிநா அணரி அண்ணம் வருடப் பிறக்கும் எழுத்துக்கள் யாவை?
4. ‘வரன்முறை மூன்றும் குற்றெழுத்து உடைய’– விளக்குக.
5. பனையென் அளவும் காவென் நிலையும்

   நினையுங் காலை இன்னொடு சிவணும் – தெளிவுபடுத்துக.
6. ஞ ந என்னும் புள்ளியீறுகட்கு வரும் சாரியை எது?
7. ‘யவமுன் வரினே வகரம் ஒற்றும்’ – விளக்குக.
8. ‘இல்ல மரப்பெயர் விசைமர வியற்றே’ – பொருள் தருக.
9. வண்டு, பெண்டு என்னும் சொற்கள் எச்சாரியை பெற்று வரும்?
10. ஒலியணியல் என்றால் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) அளபெடை பற்றித் தொல்காப்பியர் தரும் வரையறைகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) மொழி முதல் எழுத்துக்கள் பற்றித் தொல்காப்பியரின் கருத்துக்களைத் தெளிவுபடுத்துக.

12. (அ) மெய்யெழுத்துக்கள் பிறக்கும் முறை பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) 'ஆங்கந் நான்கே மொழிபுணர் இயல்பே' – தக்க சான்றுகளுடன் விளக்குக.

13. (அ) உயிரீறு மெய்யீறுகளின் பொதுப்புணர்ச்சி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) முற்றுகர, குற்றுகர ஈறுகள் குறித்து விளக்கி எழுதுக.

14. (அ) ஆகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சியை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) ணகர, னகர ஈற்றுப் புணர்ச்சியால் நிகழும் மாற்றங்களைச் சான்று தந்து விளக்குக.

15. (அ) குற்றுகர எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒலியணியல் வகைகளைத் தக்க சான்றுகளுடன் நிறுவுக.

## பகுதி இ ( 3×10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. நூன்மரபு புலப்படுத்தும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

17. தமிழ் எழுத்துக்களின் பிறப்பு பற்றி தொல்காப்பியர் உணர்த்தும் கருத்துகளை விரித்துரைக்க.

18. உயிரீறு, மெய்யீறுகளின் சிறப்புப் புணர்ச்சி குறித்துக் கட்டுரை வரைக.

19. ஐகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சியைத் தொகுத்துரைக்க.

20. குற்றியலுகரப் புணர்ச்சியினைத் தொகுத்துரைக்க.

---

**F–2765**

**Sub. Code**
**7MTA1E2**

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**First Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் – மக்கள் தகவல் தொடர்பியல்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours                                        Maximum : 75 Marks

பகுதி அ                                        (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. தொடர்பியல் என்றால் என்ன?

2. அச்சு வழிச் சாதனங்கள் என்றால் என்ன?

3. நச்சு இதழ்கள் என்றால் என்ன?

4. செய்தி ஆசிரியர் என்பவர் யார்?

5. பி.பி.சி (BBC) – விரிவாக்கம் தருக.

6. தொலைக்காட்சி வழியாக ஒலிபரப்பப்படும் விவசாய நிகழ்ச்சிகள் இரண்டினைக் கூறுக.

7. திரைப்படங்களின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

8. திரைப்பட சங்கங்களின் பெயரினைக் கூறுக.

9. செயற்கைக்கோள் என்றால் என்ன?

10. இணையம் என்றால் என்ன?

### பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) தகவல் தொடர்புக் கோட்பாடுகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) தகவல் தொடர்பில் மின்னணுச் சாதனங்களின் பங்கு குறித்து விளக்குக.

12. (அ) இதழ்கள் தொடங்கும் முன் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) இதழ்களில் வணிகப் பகுதியின் இன்றியமையாமை குறித்து விளக்குக.

13. (அ) இந்தியாவில் தொலைக்காட்சி தோன்றிய வரலாறு குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) வர்கீஸ் குழு பரிந்துரைகள் குறித்து விளக்கி எழுதுக.

14. (அ) திரைப்படம் சமுதாயத்தில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) மக்கள் தொடர்புக் கலையில் திரைப்படத்தின் பங்கு குறித்து விளக்குக.

15. (அ) கணிப்பொறியின் பயன்கள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) மக்கள் தொடர்பு அலுவலரின் பணிகளை விளக்கி எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் **கட்டுரை** வடிவில் விடை தருக.

16. தகவல் தொடர்பின் வகைகள் குறித்து விவரிக்க.

17. இதழ்களின் நிர்வாக அமைப்பு முறை குறித்து விரித்துரைக்க.

18. தொலைக்காட்சியின் பல்வேறு வகையான ஒலிப்பரப்புக்கள் குறித்துக் கட்டுரை வரைக.

19. இந்தியத் திரைப்படத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து விவரிக்க.

20. தொடர்பியல் சாதனங்களும் மக்கள் கருத்துக்களும் குறித்துக் கட்டுரை வரைக.

———————

**F–2766**

**Sub. Code**
**7MTA1E3**

**M.A DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**First Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் : கோயிற்கலை**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. மூர்த்தி என்றால் என்ன?

2. தீர்த்தம் என்றால் என்ன?

3. தீர்த்தவாரி என்றால் என்ன?

4. ஆறுகாலப் பூசைகளின் பெயர்களைக் கூறுக.

5. நிருவாகம் என்றால் என்ன?

6. தொல்பொருள் துறையின் பணிகள் இரண்டினைக் கூறுக.

7. குறியீடுகள் என்றால் என்ன?

8. நாட்டுப்புற ஆண் தெய்வங்களின் பெயர் நான்கினைக் கூறுக.

9. நம்பிக்கைகள் என்றால் என்ன?

10. சிறுதெய்வங்கள் ஐந்தின் பெயர்களைக் கூறுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கோவில் சொற்பொருள் விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) சிறுதெய்வக் கோயில்களின் அமைப்பு குறித்து விளக்கி எழுதுக.

12. (அ) நாள் வழிபாடுகள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) திருக்கல்யாணத்தின் இன்றியமையாமை குறித்து விளக்குக.

13. (அ) திருக்கோவில் வளர்ச்சிக்கு மடங்களின் பங்களிப்புக் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) திருக்கோவில் நிர்வாக அமைப்பு முறை குறித்து எழுதுக.

14. (அ) திருவுருவ அமைதி என்றால் என்ன? அதன் சிறப்புக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) இசுலாமிய சமய திருவுருவ நிலை குறித்து விளக்குக

15. (அ) பெருந்தெய்வங்களுக்குப் படைக்கும் படையல் பொருள்களையும் அதன் சிறப்புகளையும் விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) இசுலாமிய வழிபாட்டு முறைகள் குறித்து விளக்கி எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

. எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. கோவில்களின் தோற்றச் சூழல் குறித்துக் கட்டுரை வரைக.

17. வழிபாட்டின் நோக்கம் குறித்து விளக்கி எழுதுக.

18. திருக்கோவில் வளர்ச்சிக்கு இந்து அறநிலையத் துறையின் பங்களிப்புக் குறித்துக் கட்டுரை வரைக.

19. நாட்டுப்புறத் தெய்வங்களுள் பெண் தெய்வம் பெறும் இடத்தினை ஆராய்க.

20. சிறு தெய்வ வழிபாட்டில் நம்பிக்கைகள் பெற்றிருக்கும் செல்வாக்கினை ஆராய்க.

---

**F–2767**

| Sub. Code |
|---|
| 7MTA2C1 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Second Semester**

**தமிழ்**

காப்பிய இலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** ($10 \times 2 = 20$)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. மதுரைக் காண்டத்தின் காதைகளைக் குறிப்பிடுக.

2. சிலப்பதிகாரம் மாண்புகள் இரண்டினைக் சுட்டுக.

3. பெருங்கதையின் பின்புலத்தினைத் தருக.

4. சுரமஞ்சரியின் இயல்பினை எழுதுக.

5. கம்பராமாயணத்தின் உள்ளடக்கத்தினைச் சுட்டுக.

6. பெரியபுராணத்தின் முதனூலைக் குறிப்பிடுக.

7. தருமி குறித்து எழுதுக.

8. சூது என்றால் என்ன?

9. ஆதி பருவம் என்பது எதைப்பற்றியது?

10. நபி அவதாரத்தின் நோக்கத்தினைத் தருக.

**பகுதி ஆ** (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) மதுரையின் தொன்மையினை எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆபுத்திரன் – விளக்கம் செய்க.

12. (அ) சீவகனின் சிறப்பினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பெருங்கதை சுட்டும் அறத்தினைப் புலப்படுத்துக.

13. (அ) தடுத்தாட் கொண்ட புராணம் – விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) கம்பரின் கவித்திறனை சான்றுடன் மதிப்பிடுக.

14. (அ) திருவிளையாடலின் மகிமையினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சூது 'கேடு' என்பதனை நிறுவுக.

15. (அ) எச்.ஏ.கிருஷ்ணனாரின் இறை வேண்டலைத் தருக.

(அல்லது)

(ஆ) மக்கள் மேன்மையுற நபிகள் கூறுவனவற்றைக் குறிப்பிடுக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக,

16. மணிமேகலை உணர்த்தும் வாழ்வியல் முறையைக் கட்டுரைக்க.

17. சீவகன் சுரமஞ்சரியின் உரையாடலை விளக்குக.

18. சுந்தர காண்டத்தின் அமைப்பு குறித்து மதிப்பிடுக.

19. வில்லிபாரதம் உணர்த்தும் அறநெறிகளைக் குறிப்பிடுக.

20. இரட்சண்ய யாத்ரீகத்தின் வரலாற்றுப் படலம் குறித்து விளக்கி வரைக.

---

**F–2768**

**Sub. Code**
**7MTA2C2**

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Second Semester**

**தமிழ்**

சிற்றிலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு** வரிகளில் விடை தருக.

1. தெள்ளாற்றில் வென்ற கோன் யார்?விளக்கம் தருக.

2. தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன் யார்? விளக்குக.

3. "கற்பூரத் தட்டின் தீச்சுடர்" என்று தமிழ் விடுதூது எதனை விளக்குகிறது?

4. "பாத்திரம் கொண்டே பதிபால் பாய்பசுவைப் சூத்திரம் கொண்டே பினித்த தூயோர்" – விளக்குக.

5. குலோத்துங்கனின் கட்டளை மொழிகளை எழுதுக.

6. கரிகாற் சோழனின் சிறப்பாக மூவர் உலா குறிப்பது யாது?

7. "குட்டையில் போடுதல்" – விளக்குக.

8. அன்பர் என்பவர்க்கு அபிராமி எதனை வழங்குவரர் என்று அபிராமி அந்தாதி பட்டியலிடுகிறது.

9. குறவர் குலச் சிறப்பாகக் குறத்தி எதனைக் கூறினான்?

10. சிவபெருமான் யாருக்காக எதற்காகத் தூது சென்றார்?

### பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) நந்திக் கலம்பகத்தில் “காலம்” எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது விளக்குக.

(அல்லது)

(ஆ) குழந்தையை காக்க வைத்தியநாதரை எவ்வாறு பிள்ளைத் தமிழாசிரியர் வேண்டுகிறார்? விளக்கி எழுதுக.

12. (அ) தமிழ்விடு தூது தமிழின் தெய்வீக ஆற்றல்களாக எவற்றைக் கூறுகிறது? விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழைத் தவிர பிறவற்றைத் தூதாக விடுக்காமைக்குரிய காரணங்கள் யாவை?

13. (அ) கலிங்கத்துப் பரணியில் காளிக்குக் கூறி கூறிய செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) தூங்கெயில் எரிந்த தொடித்தோட் செம்பியன் குறித்து விளக்குக.

14. (அ) திருமால் தொடர்பான தொன்மங்களை ஏசல்வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) அபிராமிவல்லியின் தோற்றப் பொலிவினை விளக்குக.

15. (அ) குறத்தி கூறிய குறிமொழியை விளக்குக.

(அல்லது)

(ஆ) மாணிக்கவாசகருக்கு இறைவன் அருளிய திறத்தினை நால்வர் நான்மணிமாலை வழி விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. நந்திவர்மனின் போர்ச் சிறப்பினை நந்திக் கலம்பகம் எவ்வாறு விவரிக்கின்றது? ஆராய்க.

17. தமிழ்விடுதூதில் தொன்மங்களைப் பயன்கொண்ட ஆசிரியரின் திறத்தினை மதிப்பிடுக.

18. சோழன் குடிப்பெருமையினை விக்கிரமசோழன் உலா எவ்வாறு புலப்படுத்துகிறது? ஆராய்க.

19. குற்றாலக் குறவஞ்சியில் இடம்பெற்றுள்ள மலை வருணையை விவரிக்க.

20. நால்வர் நான்மணிமாலை சிவபெருமான் அடியார்களுக்கருளும் பான்மையை எங்ஙனம் விவரித்துள்ளது? மதிப்பீடுக.

**F–2769**

**Sub. Code**
**7MTA2C3**

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Second Semester**

**தமிழ்**

இலக்கியக் கொள்கைகளும் திறனாய்வும்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours                                  Maximum : 75 Marks

**பகுதி அ**                    (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

1. திறனாய்வு என்றால் என்ன?

2. திறனாய்வின் பயன்கள் இரண்டினைக் கூறுக.

3. விளக்கமுறைத் திறனாய்வு வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளுள் இரண்டினைக் கூறுக.

4. ஒப்பீட்டுமுறைத் திறனாய்வு என்றால் என்ன?

5. கற்பனை என்றால் என்ன?

6. தொல்காப்பியர் கற்பனை குறித்து தொல்காப்பியத்தில் எவ்வியலில் கூறுகிறார்?

7. கவிதை என்பதற்கு ஷெல்லி தரும் விளக்கம் யாது?

8. சிறுகதையின் இலக்கணம் யாது?

9. வெளிப்பாட்டுக் கொள்கை என்பது யாது?

10. பயன்வழிக் கொள்கை என்றால் என்ன?

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) திறனாய்வாளருக்கான திறன்களை விளக்கிக் கூறுக.

(அல்லது)

(ஆ) மதிப்புரைக்கும் திறனாய்வுக்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறுக.

12. (அ) விதிமுறைத் திறனாய்வு குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) மதிப்பீட்டு முறைத் திறனாய்வு குறித்து விளக்கி எழுதுக.

13. (அ) தொல்காப்பியர் சுட்டு உணர்ச்சிகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) படைப்புக் கற்பனை என்றால் என்ன? விளக்கி எழுதுக.

14. (அ) ஹைக்கூ கவிதையின் தனித்தன்மைகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) நாவலின் அடிப்படைப் பண்புகளை விளக்கி எழுதுக.

15. (அ) திறனாய்வுக் கொள்கையின் பணிகள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) திறனாய்வில் சமூகவியல் கொள்கைகள் பெறுமிடத்தை விளக்கி எழுதுக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடை தருக.

16. உரையாசிரியர்கள் திறனாய்வாளர்களா? ஆராய்க.

17. திறனாய்வின் வகைகள் குறித்து விவரிக்க.

18. கருத்து விளக்கக் கற்பனை குறித்து விவரிக்க.

19. கவிதையின் தற்கால வளர்ச்சி குறித்து விவரிக்க.

20. தற்காலத் திறனாய்வுப் போக்குகள் குறித்துக் கட்டுரை வரைக.

**F–2770**

**Sub. Code**
**7MTA2C4**

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Second Semester**

**தமிழ்**

தொல்காப்பியம்: சொல்லதிகாரம் (சேனாவரையர் உரை)

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. வண்ணச் சினைச் சொல் என்றால் என்ன?
2. இரட்டைக் கிளவி என்றால் என்ன?
3. ஏழாம் வேற்றுமை வினை நிகழும் இடத்து எத்தனை பொருட்கள் வரும்?
4. உருபு மயக்கம் என்றால் என்ன?
5. தன்மைப்பெயர் என்றால் என்ன?
6. குறிப்பு வினைமுற்று என்றால் என்ன?
7. மன்னைச் சொல் எத்தனை?
8. "கழுமென் கிழவி மயக்கம்" செய்யும் பொருள் தருக.
9. வடசொல் என்றால் என்ன?
10. ஒட்டுக்களின் வகைகளைக் கூறுக.

**பகுதி ஆ** (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) கிளவியாக்கம் கூறும் வழுவமைதி பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) கிளவியாக்கத்தில் செய்யுள் இலக்கணங்களாகக் கூறப்பெற்ற கருத்துக்களை எடுத்துரைக்க.

12. (அ) ஆறாம் வேற்றுமை உருபையும் பொருளையும் சுட்டி விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) நான்காம் வேற்றுமையில் பிறவேற்றுமை வந்து மயங்குதல் உண்டு? தக்க சான்றுடன் விளக்குக.

13. (அ) விளியேற்கும் உயர்திணைப் பெயர்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) முறைப்பெயர் பற்றி தொல்காப்பியம் உரைக்கும் கருத்துக் களை விளக்குக.

14. (அ) உம், ஓ என்ற இடைச்சொற்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) உரிச்சொல்லின் பொது இலக்கணம் கூறி விளக்குக.

15. (அ) எச்சவியல் புலப்படுத்தும் சொல் மரபுகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) உருபன்களை எவ்வாறெல்லாம் பிரித்து உணரலாம்? விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. கிளவியாக்கம் தொடரியல் கோட்பாடுகளை உணர்த்தும் பகுதி என்பதை ஆராய்க.

17. ஆகுபெயர் பற்றித் தொல்காப்பியம் உரைக்கும் கருத்துக்களை விவரிக்க.

18. விளிமரபுச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

19. இடைச்சொற்கள் குறித்துக் கட்டுரை வரைக.

20. தொகை மொழிகள் குறித்த செய்திகளைத் தொகுத்துரைக்க.

———————

**F–2771**

**Sub. Code**
**7MTA2E1**

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Second Semester**

**தமிழ்**

விருப்பப்பாடம் –கம்பர்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. வீரயுகம் – விளக்கம் செய்க.

2. காவியம் – காப்பியம் வேறுபாடு தருக.

3. கம்பனின் காலம் பற்றி எழுதுக.

4. தெலுங்கு ராமாயணத்தின் ஆசிரியர் பெயரினைச் சுட்டுக.

5. காப்பிய இலக்கணம் தருக.

6. வைணவ காப்பியங்கள் இரண்டினை எழுதுக.

7. கும்பகர்ணன் குறித்துப் பகிர்க.

8. கம்பராமாயணத்தில் வரும் திருப்புமுனை இரண்டினைச் சுட்டுக.

9. மில்டன் – குறிப்பு வரைக.

10. ஹோமர் எழுதிய காவியத்தின் பெயரினைக் கூறுக.

### பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கம்பராமாயணத்தின் சிறப்புக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கம்பராமாயணத்தின் வாழ்வியல் செய்திகளைத் தருக.

12. (அ) கம்பர் குறித்து வழங்கப்பெறும் செவிவழிச் செய்திகளைத் தருக.

(அல்லது)

(ஆ) தமிழின் முதற்காப்பியம் குறித்து புலப்படுத்துக.

13. (அ) கம்பராமாயணத்தின் காண்டங்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) கம்பரின் கவித்திறனை மதிப்பிடுக.

14. (அ) இயற்கைக் காட்சியை கம்பர் கவிதையாக்கும் திறத்தை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கம்பரின் காப்பியப் பார்வையினை விளக்குக.

15. (அ) மில்டனுடன் கம்பரை ஒப்பிடுக.

(அல்லது)

(ஆ) 'கல்வியில் பெரியவர் கம்பர்'– நிறுவுக.

### பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக..

16. காப்பியத்தின் தோற்றம் பற்றி எடுத்துரைக்க.

17. இந்திய மொழிகளில் இராம காதையின் இடத்தைத் திறனாய்க.

18. கம்பராமாயணத்தின் உள்ளடக்கத்தினை விளக்குக.

19. இலக்குவனனின் பாத்திரப் படைப்பை விரித்துரைக்க.

20. ஒப்பீட்டு நோக்கில் கம்பராமாயணத்தை மதிப்பிடுக.

———————

**F–2772**

**Sub. Code**
**7MTA2E3**

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Second Semester**

**தமிழ்**

விருப்பப்பாடம் – சித்தர் இலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours                                        Maximum : 75 Marks

**பகுதி அ**                    (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரிரு வரிகளில் விடை தருக.

1. பதினெண் சித்தர்களின் பெயர்களைச் சுட்டுக.

2. பட்டினத்தாருக்கு வழங்கும் பிற பெயர்களைக் கூறுக.

3. திருமூலர் சுட்டும் அத்திப்பழம், அரைக்கீரை எது?

4. “ஆட்டிறைச்சி தின்றதில்லை அன்றும் இன்றும் வேதியீர்” என்று பாடியவர்?

5. குதம்பைச் சித்தர் பிறந்த மாதம்? நட்சத்திரம் எது?

6. “கொல்லன் உலைபோலக் கொதிக்குதடி என் வயிறு” – என்று கொதிப்பவர் யார்?

7. பட்டினத்தாரின் தாய், தந்தையரின் பெயரினைச் சுட்டுக.

8. தூண்டில் அகப்பட்டுத் துடிகெண்டை ஆனவர் யார்?

9. உள்ளம் அறியாது ஒளிந்திருந்த நாயகன் யார்?

10. எட்டாமல் ஒட்டி நிற்பது எது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) சித்தர்களின் வரலாறு குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) சித்தர்களின் நிலையாமைச் சிந்தனைகள் குறித்து விளக்குக.

12. (அ) திருமந்திரம் கூறும் உயர்நிலையாமை குறித்த செய்திகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) சிவவாக்கியரின் இறைத்தன்மை எத்தகையது? விளக்குக.

13. (அ) குதம்பைச் சித்தர் பற்றி நீவிர் அறியும் கருத்துக்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) அழுகணிச் சித்தரின் வரலாற்றை விளக்கி எழுதுக.

14. (அ) பட்டினத்தாரின் தேடல் எத்தகையது? விளக்குக.

(அல்லது)

(ஆ) பட்டினத்தாரின் தத்துவங்களைப் பட்டியலிடுக.

15. (அ) பத்திரிகிரியாரின் பாடல்கள் உணர்த்தும் உட்கருத்தினை விளக்குக.

(அல்லது)

(ஆ) பத்திரிகிரியார் பாடல்களில் காணப்படும் எதிர்நோக்குச் சிந்தனைகள் விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. சித்தர்களின் பிற துறைச் சிந்தனைகள் குறித்துக் கட்டுரை வரைக.

17. திருமூலர் உணர்த்தும் வாழ்வியல் கருத்துக்களை விவரிக்க.

18. அழுகணிச்சித்தர் பாடலின் போக்கைப் புலப்படுத்துக.

19. பட்டினத்தாரின் புலம்பல்கள் புலப்படுத்தும் உண்மை நெறியினைத் தெளிவுபடுத்துக.

20. பத்திரிகிரியார் பாடல்கள் கூறும் அறிவுரைகளை விவரிக்க.

---

**F–2773**

| Sub. Code |
|---|
| 7MTA3C1 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Third Semester**

**தமிழ்**

**சங்க இலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. எட்டுத் தொகையில் உள்ள அகநூல்களைக் குறிப்பிடுக.

2. சேரர்களைக் குறித்துப் பாடப்பட்ட நூல் எது?

3. நெடுந்தொகை நானூறு பெயர்க்காரணம் தருக.

4. வஞ்சி நெடும்பாட்டு என்று அழைக்கப்படும் நூல் எது?

5. குறுந்தொகையின் பாடல் அடிகளைக் கூறுக.

6. பரிபாடலில் இடம்பெற்றுள்ள பாடல்கள் எத்தனை? அதன் ஆசிரியர் யார்?

7. குறிஞ்சிப்பாட்டில் இடம்பெற்றுள்ள மலர்கள் ஐந்தின் பெயரினைக் கூறுக.

8. முல்லைப்பாட்டினைப் பாடியவர் யார்?

9. பட்டினப்பாலை பெயர்க்காரணம் தருக?

10. ஆற்றுப்படை என்றால் என்ன?

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) பரணர் பாடலின் சிறப்பினைப் புறநானூற்றுப் பாடலின் வழி தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பதிற்றுப்பத்தின் பாடல்கள் அனைத்தும் பாடாண் திணையில் அமைந்திருக்க காரணம் என்ன என்பதை ஆராய்ந்துரைக்க.

12. (அ) மாமூலனார் பாடல் வழி வெளிப்படும் கருத்துகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) தலைவி மாலைப் பொழுது கண்டு புலம்பியபோது தோழி ஆற்றியதைக் கலித்தொகை பாடல் கொண்டு விளக்குக.

13. (அ) ஆலங்குடி வங்கனாரின் பாடல் வழி வெளிப்படும் கருத்துகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பரிபாடல்கள் காட்டும் திருமாலின் சிறப்புகளைக் குறிப்பிடுக.

14. (அ) தமிழரின் அகப்பொருள் மரபைக் குறிஞ்சிப்பாட்டின் வழி நிறுவுக.

(அல்லது)

(ஆ) நல்ல நேரம் பார்க்கும் முறையை முல்லைப் பாட்டின் மூலம் விளக்குக.

15. (அ) காவேரிப்பூம்பட்டினத்தின் சிறப்புக்களைப் பட்டினப்பாலை எங்ஙனம் எடுத்துரைக்கிறது? தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) சிறுபாணாற்றுப்படை உணர்த்தும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு **கட்டுரை வடிவில்** விடை தருக.

16. செவியறிவுறுத்தும் துறையில் அமைந்த புறநானூற்றுப் பாடல்களின் சிறப்புகளைக் கட்டுரைக்க.

17. களிற்றுயானை நிரை பகுப்பில் உள்ள பாடல்கள் புலப்படுத்தும் கருத்துக்களை விவரிக்க.

18. ஐங்குறுநூற்று மருதத் திணைப் பாடல்களின் சிறப்புகளைத் தொகுத்துரைக்க.

19. குறிஞ்சிப்பாட்டின் சிறப்புக்களை விளக்கிக் கட்டுரை வரைக.

20. சிறுபாணாற்றுப்படை புலப்படுத்தும் பாணர்களின் வறுமை நிலைகளைத் தொகுத்துரைக்க.

———————

**F–2774**

**Sub. Code**
**7MTA3C2**

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Third Semester**

**தமிழ்**

தொல்காப்பியம் – பொருளதிகாரம் –(நச்சினார்கினியர் உரை) (முதல் ஐந்து இயல்கள்)

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. நடுவண் ஐந்திணை என்றால் என்ன?

2. காரும் மாலையும் எத்திணைக்குரிய காலமாகும்?

3. காஞ்சித் திணையின் இலக்கணம் யாது?

4. கொடிநிலை என்றால் என்ன?

5. அம்பலுக்கும் அலருக்குக்கும் உள்ள வேறுபாடு யாது?

6. அல்லகுறிப்படுதல் என்றால் என்ன?

7. கரணம் என்றால் என்ன?

8. அலரில் தோன்றும் காமத்து மிகுதி – பொருள் தருக.

9. இறைச்சி என்றால் என்ன?

10. உள்ளுறையின் வகைகளைக் கூறுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தொல்காப்பிய அகத்திணையில் சொல்லப்பட்ட பிரிவுகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) பிரிவின்கண் கண்டோர் கூற்று நிகழும் இடங்களைச் சான்றுடன் விளக்குக.

12. (அ) நொச்சித்திணைக்குரிய துறைகளாகச் சொல்லப்படுவன யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) வாகைத் திணையின் பாகுபாடுகளை விளக்கி எழுதுக.

13. (அ) மறையோர் தேய்த்து மன்றல் எட்டே – விளக்குக.

(அல்லது)

(ஆ) மெய்யுறு புணர்ச்சி நிகழும் காலம் யாது? தக்க சான்றுகளுடன் விளக்கி எழுதுக.

14. (அ) கிழவோன் மாண்புகள் எனத் தொல்காப்பியர் தம் கற்பியலில் கூறுவன யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) கற்பியலில் காமக்கிழத்தியர் கூற்று நிகழும் இடங்களை விளக்கி எழுதுக.

15. (அ) தலைமகளுக்கு இன்றியமையாத மடன் அழியும் இடம் குறித்து ஆசிரியர் கூறுவது யாது?

(அல்லது)

(ஆ) வரைதல் வேட்கைப்பொருள் எவை எனக் கூறி விளக்கி எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. தொல்காப்பியர் கூறும் முதல், கரு, உரி ஆகியவற்றின் அமைப்பும் சிறப்பும் குறித்து விவரிக்க.

17. தொல்காப்பியர் கூறும் தும்பைத் திணையும் அதன் துறைகளையும் விவரிக்க.

18. களவியல் வாயிலாக அறியலாகும் தோழியின் பண்பு நலன்களை விவரிக்க.

19. கற்பியலின் தலைவன் கூற்று நிகழும் இடங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

20. பொருளியலில் சொல்லப்படும் கருத்துக்களை விவரிக்க.

———————

**F–2775**

**Sub. Code**
**7MTA3C3**

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Third Semester**

**தமிழ்**

ஆராய்ச்சி நெறிமுறைகள்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. ‘ஆய்வு’ என்றால் என்ன?

2. ஆய்வாளரின் தகுதிகள் இரண்டினைக் கூறுக.

3. பேட்டி என்றால் என்ன?

4. கள ஆய்வு என்றால் என்ன?

5. திட்டமிடல் என்றால் என்ன?

6. துணைநூற்பட்டியலின் பயன்கள் இரண்டினைக் கூறுக.

7. தமிழ் உரையாசிரியர்கள் மூவரின் பெயரினைக் கூறுக.

8. மேலைநாட்டு ஆய்வாளர்கள் இருவரின் பெயரினைக் கூறுக.

9. வ.சுப.மாணிக்கனாரின் படைப்புகள் நான்கினைக் கூறுக.

10. தமிழ் ஆய்வறிஞர் நால்வரின் பெயரினைக் கூறுக.

**பகுதி ஆ** (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) அறிவியல் ஆய்வு குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆய்வின் அடிப்படைக் கோட்பாடுகள் குறித்து விளக்குக.

12. (அ) ஆய்வின் சிறப்பிற்கு உற்று நோக்கலின் தேவை குறித்து மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) ஆய்விற்குக் கருதுகோளின் இன்றியமையாமை குறித்து விளக்குக.

13. (அ) ஆய்வின் வளமைக்கு மேற்கோள் பெறுமிடத்தினை ஆராய்க.

(அல்லது)

(ஆ) ஆய்வேட்டில் பின்னிணைப்பு பெறும் இடத்தினை ஆய்க.

14. (அ) தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு மேலைநாட்டு ஆய்வாளர்களின் பங்களிப்புக் குறித்து விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) தமிழ் உரையாசிரியர்கள் இருவரின் தமிழ்ப்பணியை விளக்கி எழுதுக.

15. (அ) க.கைலாசபதியின் ஆய்வுத் தடம் குறித்து விளக்குக

(அல்லது)

(ஆ) வையாபுரிப்பிள்ளையின் ஆய்வுப் பார்வை குறித்து விளக்கி எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக..

16. ஆய்வாளரின் வகைகள் குறித்துக் கட்டுரை வரைக.

17. ஆய்விற்குத் தகவல் திரட்டும் முறைகள் குறித்துக் கட்டுரை வரைக.

18. ஆய்வேட்டின் அமைப்பு முறை குறித்து விவரிக்க.

19. தமிழ் ஆய்வு வரலாறு குறித்து விவரிக்க.

20. உ.வே.சா வின் தமிழ்ப் பதிப்புப் பணி குறித்துக் கட்டுரை வரைக.

---

| F–2776 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA3E1 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Third Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் – ஊடகத்தமிழ்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. தூது என்றால் என்ன?

2. மரபுவழித் தகவல் தொடர்பு என்றால் என்ன?

3. தொடர்பியல் என்றால் என்ன?

4. செல்லுலார் தொலைபேசி என்றால் என்ன?

5. இந்தியாவில் முதன்முதலில் வானொலி தொடங்கப்பட்ட ஆண்டு எது?

6. செயற்கைக்கோள் என்றால் என்ன?

7. தொலைக்காட்சியின் தோற்றத்திற்கு மூலகாரணமாக இருந்த விஞ்ஞானியின் பெயர் என்ன?

8. தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தின் பெயர்கள் நான்கினைக் கூறுக.

9. கணினி என்றால் என்ன?

10. மின்னணு அஞ்சல் என்றால் என்ன?

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) தெருக்கூத்து வழியாகத் தகவல்களை உணர்த்தும் முறை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) தகவல் பரிமாற்றத்தில் வில்லுப்பாட்டு பெறும் இடத்தினை மதிப்பிடுக.

12. (அ) இந்தியாவில் தந்திமுறைத் தொலைபேசியின் வகைகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) செல்லுலார் தொலைபேசிக் கருவிகளின் இன்றியமையாமை குறித்து விளக்குக.

13. (அ) இந்தியாவில் தொலைபேசியின் தொடக்க காலம் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) சமுதாய வானொலியின் பணிகள் குறித்து எழுதுக.

14. (அ) இந்தியத் தொலைக்காட்சிகள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) அரசு நடத்தும் தொலைக்காட்சி நிலையங்கள் குறித்து விளக்கி எழுதுக.

15. (அ) கணினியின் வரலாறு குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) தற்கால ஊடகங்களில் செயற்கைக் கோளின் பங்களிப்பினை விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. தகவல் தொடர்பில் தந்தி பெறும் இடத்தை மதிப்பீடு செய்க.

17. தகவல் தொடர்புப் பரிமாற்றத்தில் நாட்டுப்புறப் பாடல்கள் பெறும் இடத்தினை ஆராய்க.

18. இந்தியாவில் வானொலி தோன்றி வளர்ந்த விதம் குறித்துக் கட்டுரை வரைக.

19. தகவல் தொடர்புச் சேவையில் தனியார் தொலைக்காட்சியின் பங்களிப்புக் குறித்து விவரிக்க.

20. இணையத்தின் வரலாறு குறித்து விரித்துரைக்க.

———————

**F–2777**

**Sub. Code**
**7MTA3E5**

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Third Semester**

தமிழ்

விருப்பப்பாடம் — பணிவாய்ப்புத் தமிழ்

**(CBCS – 2019–20 onwards)**

Time : 3 Hours　　　　Maximum : 75 Marks

(75 × 1 = 75)

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

1. பண்டைய தமிழ் நாட்டின் வடக்கு எல்லை எது?

(அ) குமரிக்கடல்　　(ஆ) கள்ளிக்கோட்டை

(இ) தெலுங்கானா　　(ஈ) வேங்கடம்

2. தென்னிந்திய திராவிட மொழிகளின் எண்ணிக்கை

(அ) 20　　(ஆ) 24

(இ) 28　　(ஈ) 22

3. தனிநிலை மொழி எனப்படுவது எது?

(அ) இடைநிலை　　(ஆ) விடுதி

(இ) பகுதி　　(ஈ) சந்தி

4. வாக்கியத்தில் சொற்களை இடம் மாற்றினால் அதன் பொருள் மாறுவது

(அ) அசைநிலை　　(ஆ) பிரிநிலை

(இ) இசைநிலை　　(ஈ) ஒட்டுநிலை

5. திருந்திய திராவிட மொழிகள் எத்தனை?

(அ) ஐந்து (ஆ) ஆறு

(இ) ஒன்பது (ஈ) எட்டு

6. திராவிடம் என்ற சொல்லிலிருந்து தான் 'தமிழ்' என்ற சொல் தோன்றியது என்பவர்

(அ) ஜி.யூ. போப் (ஆ) வீரமாமுனிவர்

(இ) கால்டுவெல் (ஈ) எல்லீஸ்

7. குடகு என் பகுதி எப்பகுதி

(அ) கிழக்கு (ஆ) மேற்கு

(இ) வடக்கு (ஈ) தெற்கு

8. திராவிட மொழிகளில் அதிக ஒலிகள் உடைய மொழி எது?

(அ) தெலுங்கு (ஆ) தமிழ்

(இ) தோடா (ஈ) துளு

9. இரண்டாம் தமிழ்ச் சங்கம் இருந்த இடம் எது?

(அ) தென்மதுரை (ஆ) கபாடபுரம்

(இ) வடமதுரை (ஈ) குடகு

10. போருக்குத் தொடக்கமாக அமையும் திணை எது?

(அ) தும்மை (ஆ) உழிஞை

(இ) வெட்சி (ஈ) வாகை

11. குளத்தை மிகவும் வருணத்துப்பாடிய சங்கப் புலவர் யார்?

(அ) கபிலர் (ஆ) கயமனார்

(இ) காக்கை பாடினியார் (ஈ) அம்மூவனார்

12. சங்கப்பாடல்கள் பாடிய புலவர்களில் பெயர் தெரியாத பாடல்கள் எத்தனை?

(அ) 102 (ஆ) 108

(இ) 130 (ஈ) 110

13. கலித்தொகையை முதன்முதலில் அச்சிட்டு வெளியிட்டவர்

(அ) ஆறுமுக நாவலர்

(ஆ) வெங்கடசாமி நாட்டார்

(இ) உ.வே. சாமிநாதய்யர்

(ஈ) சி.வை. தாமோதரம் பிள்ளை

14. 'சமுதாயப் பாட்டு' என்ற சிறப்புப் பெற்ற நூல் எது?

(அ) சிறுபெரும்பாணாற்றுப்படை

(ஆ) பெரும்பாணாற்றுப்படை

(இ) கூத்தாராற்றுப்படை

(ஈ) திருமுருகாற்றுப்படை

15. திரிபுரம் எரித்த கடவுள் யார்?

(அ) முருகன் (ஆ) திருமால்

(இ) சிவன் (ஈ) வருணன்

16. சங்கத்தமிழ் மூன்றும் தா என இறைவனிடம் வேண்டியவர்

(அ) மாசாத்தியார் (ஆ) ஔவையார்

(இ) பாண்டிமாதேவி (ஈ) நப்பசலையார்

17. தமிழ் முதல் உறையாசிரியர் யார்?

(அ) நக்கீரர் (ஆ) இளம்பூரணர்

(இ) இறையனார் (ஈ) நன்னூலார்

18. குறுந்தொகைக் கடவுள் வாழ்த்தில் இடம்பெற்றுள்ள கடவுள் யார்?

(அ) சிவன் (ஆ) முருகன்

(இ) திருமால் (ஈ) இந்திரன்

19. கொல்லிமலைத் தலைவன் யார்?

(அ) நன்னன் (ஆ) அதியமான்

(இ) வல்வில் ஓரி (ஈ) திருமுடிக்காரி

20. 'நாடகம்' போன்று காட்சி அமைப்பைக் கொண்ட நூல் எது

(அ) பரிபாடல் (ஆ) கலித்தொகை

(இ) நற்றிணை (ஈ) அகநானூறு

21. 'தாளாலின் என்பான் கடன்பட வாழாதான்' - என்னும் நூல்

(அ) ஆசாரக் கோவை (ஆ) மாமூலம்

(இ) திரிகடுகம் (ஈ) ஆசாரக் கோவை

22. ஆத்திமாலை அணிந்த இறைவன் யார்?

(அ) திருமால் (ஆ) சிவன்

(இ) முருகன் (ஈ) கொற்றவை

23. 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' - இது இடம் பெற்றுள்ள நூல்

(அ) மூதுரை (ஆ) நல்வழி

(இ) கொன்றை வேந்தன் (ஈ) ஆத்திசூடி

24. காப்பியத்திற்கு இலக்கணம் கூறும் நூல் எது

(அ) சிலப்பதிகாரம் (ஆ) கம்பராமாயணம்

(இ) மாறணலங்காரம் (ஈ) தண்டியலங்காரம்

25. கதை பொதிந்துள்ள பாட்டு என்பது

(அ) கலித்தொகை (ஆ) சிலப்பதிகாரம்

(இ) இராமாயணம் (ஈ) மணிமேகலை

26. 'நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்' என்றவர்

(அ) கண்ணகி (ஆ) சீதை

(இ) கவுந்தி (ஈ) மாதவி

27. இந்திர விழா நடக்கும் நாட்கள் எத்தனை

(அ) 30 (ஆ) 26

(இ) 28 (ஈ) 25

28. சீவகனுக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர் யார்?

(அ) சாத்தனார் (ஆ) அறவான்

(இ) அச்சணந்தி (ஈ) பவணந்தி

29. நீலகேசி என்பதன் பொருள்

(அ) கருத்த கண்கள் (ஆ) கருத்த கூந்தல்

(இ) கரிய முகம் (ஈ) நீண்ட கைகள்

30. 'அனல் வாதம்' - புனல் வாதம் நிகழ்த்தியவர் யார்?

(அ) சுந்தரர் (ஆ) அப்பர்

(இ) ஞானசம்பந்தர் (ஈ) மணிவாசகர்

31. "தம்மானை அறியாத சாதியாரும் உளரோ" - என்றவர்

(அ) மாணிக்கவாசகர் (ஆ) அப்பர்

(இ) சம்பந்தர் (ஈ) சுந்தரர்

32. ————————— சொல்ல பாடல்களை இறைவன் எழுதினார் பூர்த்தி செய்க.

(அ) சம்மந்தர் (ஆ) அப்பர்

(இ) சுந்தரர் (ஈ) மாணிக்கவாசகர்

33. இவருடைய பாடல் அமைப்புகள் ————————— கொஞ்சுதமிழ்

(அ) சம்பந்தர் (ஆ) அப்பர்

(இ) சுந்தரர் (ஈ) மணிவாசகர்

34. 'உடம்பார்அழியின் உயிரார் அழிவர் என்றவர் யார்?'

(அ) நக்கீரர் (ஆ) திருமூலர்

(இ) கபிலர் (ஈ) அப்பர்

35. சைவ சமய எழுச்சிக்கு வித்திட்டவர் ——————

(அ) சம்பந்தர்

(ஆ) அப்பர்

(இ) காரைக்காலம்மையார்

(ஈ) சுந்தரர்

36. விதை நெல்லால் உணவு சமைத்து அடியவர்க்குக் கொடுத்தவர்

(அ) மெய்ப்பொருள் நாயனார்

(ஆ) இறையான் குடி நாயனார்

(இ) பூசலார் நாயனார்

(ஈ) குலச்சிறை நாயனார்

37. 'சித்' என்பது —————— குறிக்கும்

(அ) நன்மை (ஆ) புகழ்

(இ) அறிவு (ஈ) அறம்

38. மகாபுராணம் கூறும் தீர்த்தங்கரர்கள் எத்தனை?

(அ) 22 (ஆ) 20

(இ) 18 (ஈ) 24

39. சித்தர்களின் தலைவர் யார்?

(அ) திருமூலர் (ஆ) அகத்தியர்

(இ) பட்டினத்தார் (ஈ) சிவவாக்கியார்

40. "கோயிலாவது ஏதடா குளங்களாவது ஏதடா" என்றவர்

(அ) சிவவாக்கியர் (ஆ) இடைக்காடர்

(இ) பத்தரசிரியார் (ஈ) திருமூலர்

41. கூடுவிட்டு கூடுபாயும் சித்தி எது

(அ) வசித்துவம் (ஆ) பிராகாமியம்

(இ) பிராப்தி (ஈ) ஈசத்துவம்

42. ஞானேந்திரியம் என்பது எது?

(அ) வாக்கு (ஆ) சுவை

(இ) மனம் (ஈ) மெய்

43. 'புராண நன்னாயகம்' என்ற சிறப்புக்குரியவர்

(அ) பரஞ்சோதி (ஆ) கச்சியப்பர்

(இ) சேக்கிழார் (ஈ) வீரகவிராயர்

44. தலபுராணம் பாடும் மரபைத் தமிழர் தொடங்கியவர் இவர்

(அ) மீனாட்சி சுந்தரம் (ஆ) உமாபதிசிவம்

(இ) சிவப்பிரகாசர் (ஈ) வாமனமுனிவர்

45. புராணங்களுள் பெரியது எது?

(அ) பெரியபுராணம் (ஆ) சிவபுராணம்

(இ) கந்தபுராணம் (ஈ) சேதுபுராணம்

46. சைவராகப் பிறந்தும் திருமாலைப் போற்றியவர் இவர்

(அ) அப்பர் (ஆ) சிவவாக்கியார்

(இ) இராமலிங்கர் (ஈ) சுந்தரர்

47. 'சும்மா இருப்பதே சுகம்' என்றவர்

(அ) தாயுமாணவர் (ஆ) வள்ளலார்

(இ) அருணகிரியர் (ஈ) பத்ரிகிரியார்

48. சந்த வேந்தர் என்ற சிறப்புக்குரியவர் இவர்

(அ) தாயுமானவர் (ஆ) வள்ளலார்

(இ) அருணகிரியார் (ஈ) அண்ணாமலையார்

49. 'பிரபுலிங்க லீலை' யின் ஆசிரியர் யார்?

(அ) ஆறுமுக நாவலர் (ஆ) சிவப்பிரகாசர்

(இ) வள்ளலார் (ஈ) சிவவாக்கியார்

50. அகச்சந்தானக் குறவர்கள் வாழுமிடம்

(அ) கயிலாயம் (ஆ) பொதியமலை

(இ) காசி (ஈ) திருவண்ணாமலை

51. காளக்கவி என்ற சிறப்புக்குரியவர் யார்?

(அ) காளமேகம் (ஆ) புகழேந்தி

(இ) ஒட்டக் கூத்தர் (ஈ) ஔவையார்

52. 'திருப்புகழ் அமிர்தம்' இதழின் ஆசிரியர் யார்

(அ) அருணகிரிநாதர் (ஆ) கிருபானந்த வாரியார்

(இ) இரமணர் (ஈ) தேசிகர்

53. சங்கின் அம்சமாகப் பிறந்தவர்

(அ) பூதத்தாழ்வார் (ஆ) பேயாழ்வார்

(இ) நம்மாழ்வார் (ஈ) பொய்கையாழ்வார்

54. 'பெருந்தமிழன்' என்று தன்னைக் கூறிக் கொண்டவர்

(அ) பெருஞ்சித்திரனார் (ஆ) புதத்தாழ்வார்

(இ) பேயாழ்வார் (ஈ) நம்மாழ்வார்

55. பூமகள் அம்சமாகப் பிறந்தவர்

(அ) கலைவாணி (ஆ) லக்குமி

(இ) ஆண்டாள் (ஈ) சரஸ்வதி

56. இராமாயணம் அரங்கேற்றிய ஊர் எது?

(அ) காஞ்சிபுரம் (ஆ) திருவில்லிபுத்தூர்

(இ) மதுரை (ஈ) திருவரங்கம்

57. ஐந்தாம் வேதம் எனப்படும் நூல் எது?

(அ) இராமாணயம் (ஆ) மகாபாரதம்

(இ) வில்லிபாரதம் (ஈ) திருப்பாவை

58. நாலடியாரின் உறை ஆசிரியார் யார்

(அ) காளிங்கர் (ஆ) வாமனமுனிவர்

(இ) பதுமனார் (ஈ) குணசேகரர்

59. உமறுப்புலவர் பிறந்த ஊர் எது?

(அ) ஏர்வாடி (ஆ) எட்டயாபுரம்

(இ) கீழக்கரை (ஈ) நாகபட்டினம்

60. 'சரமகவி' பாடுவதில் வல்லவர்

(அ) காசிம் புலவர் (ஆ) காதிறுநாவலர்

(இ) சவ்வாதுப் புலவர் (ஈ) சேகனாப் புலவர்

61. தரங்கம் பாடியர் அச்சுக் கூடம் நிறுவியவர்

(அ) ஜி.யூ.போப் (ஆ) சீகன் பால்கு

(இ) கால்டுவெல் (ஈ) எல்லீஸ்

62. 'தினவர்த்தமானி' என்ற வார இதழை நடத்தியவர் யார்

(அ) எல்லீஸ்

(ஆ) வின்ஸ்லோ

(இ) பர்சிவல் பாதிரியார்

(ஈ) லேசரஸ்

63. 'பெண்மதிமாலை' யின் ஆசிரியர் யார்?

(அ) ஆப்ரகாம் பண்டிதர்

(ஆ) வேதநாயகம் பிள்ளை

(இ) முத்துசாமிப் பிள்ளை

(ஈ) H.A. கிருஷ்ணபிள்ளை

64. புதுவகை யாப்பு என்பது?

(அ) அழகு (ஆ) இயைபு

(இ) விருந்து (ஈ) அம்மை

65. புறப்பொருள் வெண்பாமாலை சுட்டும் புறத்தினை எத்தனை?

(அ) 7 (ஆ) 10

(இ) 12 (ஈ) 8

66. நன்னூல் என்பது

(அ) முதல் நூல் (ஆ) சார்பு நூல்

(இ) வழி நூல் (ஈ) அற நூல்

67. தொகை எத்தனை வகைகப்படும்

(அ) எட்டு (ஆ) ஆறு

(இ) ஐந்து (ஈ) நான்கு

68. செப்பலோசை பெற்று வருவது

(அ) ஆசிரியப்பா (ஆ) வெண்பா

(இ) வஞ்சிப்பா (ஈ) கலிப்பா

69. பள்ளு கூறும் வாழ்வியல் யாருடையது?

(அ) மீனவர் (ஆ) மலைவாழ்மக்கள்

(இ) உழவர் (ஈ) ஆயர்

70. கவிதையில் முதன்முதலில் சுயசாதை எழுதியவர் யார்?

(அ) வைரமுத்து (ஆ) வாலி

(இ) பாரதிதாசன் (ஈ) பாரதியார்

71. குயில் இதழின் ஆசிரியர்

(அ) பாரதி (ஆ) பாரதிதாசன்

(இ) வாணிதாசன் (ஈ) கம்பதாசன்

72. 'சுக்கினிப் பிரவேசம்' எழுதியவர் யார்

(அ) புதுமைப் பித்தன்

(ஆ) வல்லக்கண்ணன்

(இ) ஜனகிராமன்

(ஈ) ஜெயகாந்தன்

73. 'சூல்' புதினத்தின் ஆசிரியர் யார்?

(அ) பூமணி (ஆ) சோ. தர்ம

(இ) இமயம் (ஈ) பாமா

74. 'தமிழரும் தாவரும்' நூலை எழுதியவர்

(அ) கு.வி. கிருஷ்ணமூர்த்தி

(ஆ) ச. வின்சன்ட்

(இ) ஏ. சண்முகநாதன்

(ஈ) பொன். தனசேகரன்

75. 'உழவுக்கும் உண்டு வரலாறு' எனும் நூலின் ஆசிரியர் யார்?

(அ) ச. முகமது அலி (ஆ) கு. சிவராமன்

(இ) மா. கிருஷ்ணன் (ஈ) நம்மாழ்வார்